# முன்னவர் வாழ்வியல்



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# முன்னவர் வாழ்வியல்

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

*7, இராமன் தெரு, திருநகர்,*

*மதுரை - 625 006*

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | முன்னவர் வாழ்வியல் |
| ஆசிரியர் | | இரா. இளங்குமரனார். |
| பொருள் | | மக்கள் வாழ்வியல் |
| முதலாம் பதிப்பு | | தி. பி. 2049 கி. பி. 2018. |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| புள்ளி | | 12 |
| தாள் | | 13. 7 வெள்ளைத் தாள். |
| அளவு | | 1/8 |
| பக்கம் | : | vi + 26 = 32 |
| படிகள் | : | 500 |
| விலை | | உருவா. 20/- |
| நூலாக்கம் | | **"தி பிரிண்டிங்கு அவுசு"**<br>**திருச்சிராப்பள்ளி - 23**<br>**0431 - 2420121** |
| கிடைக்கும் இடம் | | **திருவள்ளுவர் நிலையம்**<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006.<br>94431 30603<br><br>**பி. தமிழகன்**<br>2, பிச்சையம்மாள் நகர், காசாமலை,<br>திருச்சிராப்பள்ளி - 23.<br>99407 04702 |


❖❖❖❖

# மீட்டொரு விடுதலைப் போர்

கடந்த நூற்றாண்டின் மையப்பகுதி வாழ்வே இம் முன்னவர் வாழ்வியலாம். பெரிதும் சிற்றூர் சார்ந்த தொழில் - விழா - சடங்கு - கல்வி - ஒப்புரவு - வறுமை - தொடர்பான நிகழ்வுகள், எத்தனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வாழ்வோ என்று எண்ண, விரைந்த மாற்றம் கொண்டுள்ளது.

அறிவியல் தொழிலியல் ஆட்சியியல் என்பனவற்றால் ஏற்பட்ட பரபரப்பு மாற்றங்கள் இவை.

தொலைக்காட்சி எட்டாத காலம்; தொலைப்பேசி அறியாக் காலம்; எங்கோ பேரூர்களில் திரைப்படக் கொட்டகை - திரையரங்கம் - வண்டிகட்டிப் போய்ப் பார்த்து வரல்நிலை.

இவை வாழ்வியல் ஆக்கமா, அழிவியல் கேடா?

மீட்டொரு விடுதலைப் போர் ஏற்பட வேண்டும் கட்டாயச் சூழல்!

நாடு நாடாக விளங்க நல்லவர் சிந்திக்க, இளைஞர் எழ - ஏதோ ஒரு வகைத் தூண்டல் நூல்! துலக்கத்தில் தானே பயன்!

இதனை என் கைப்படி கொண்டு கணினிப்படுத்திக் குறுவட்டும் ஆக்கித் தந்த அன்பின் அருமையர் முனைவர் திருமகளார் அவர்கள் ஆவர்.

வழக்கம் போல் எம் பதிப்புகளை அமைவும் அழகும் கெழும அச்சிட்டுத்தரும் திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமம் அச்சிட்டுத் தந்தது. அப்பொறுப்பை ஏற்றுச் செய்யும் பெருந்தகை முனைவர் பி.தமிழகனார் ஆகியோர்க்கு நனிமிகு நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்.**

# வாழ்வும் வளமும் சிறக்க !

2049 சுறவம் 15 (28.01.2018) இல் **மன்னார்குடியில்** ஒரு திருமணம். மர். திருமிகு பாரதிசெல்வன் அகிலா இணையர் மகள் **இனியா,** திருமிகு **சீனிவாசன் உருக்குமணி** இணையரின் மகன் **கார்த்திகேயன்** ஆகியோர் திருமணம்.

மதுரை புரட்சிக்கவிஞர் மன்றத் தலைவர் தமிழ்த்திரு. **பி. வரதராசனார்** ஏற்பாடு. மணிவிழா **அரங்கம்** என்னைக் கொள்ளை கொண்டது.

அருமையான திரையரங்கென அமைந்த மண்டபம் - இருக்கையால் என்பது அன்று. அவை அனைத்தும் செயற்கை அழகே! **இயற்கை கொஞ்சும் அரங்கம்** செயற்கையின் ஊடும் படைக்க முடியும் என மருத்துவர் பாரதி **செல்வனார்** காட்டியிருந்தார். யான் நடத்திய 4604 திருமணங்களில் **எங்கும் காணாத இயற்கைப் பொலிவு.**

மண்டபப்படிக்கட்டுகளின் இருபாலும் தென்னங்கன்றுகள். இயற்கைத் தொங்கல்கள். உள்மண்டப முகப்பெல்லாம் மலர்ச் செடிகள் கொத்துக் கொத்தாய் மலர்கள் உள்ளவை. பழங்கால மட்பாண்டங்கள் (கலையங்கள்) ஒன்றன் மேலாய் ஒன்று அடுக்கு. பழநாள் குத்துவிளக்கு, ஊடு, **வள்ளுவர் சிலை.**

மணமக்கள் அமர்மணப்பகுதி, வைக்கோல் வேய்ந்தகுடிசை. கரும்பு - வைக்கோல் சுற்றிய தூண் தென்னம்பாளை - தளமெல்லாம் மாசுமறு இல்லாத மெல்லிய அருகம்புல் பரப்பு - பக்கமெல்லாம் குடிசை முதலாம் திரைஓவியங்கள். **இயற்கை எழில் கொஞ்ச அதனை ஓவியம் விஞ்ச அரங்கம் கொள்ளாக் கூட்டம் சின்னதோர் ஒலியும் இல்லா** அமைதி. பெருந்தகை பழ நெடுமாறனாரும், பெ. மணியரசனாரும், மன்னை **அம்பிகாபதியாரும்**

முன்னிலை - யான் கரணம் நிகழ்ந்தும் நிகழ்ச்சி. நிகழ்வும் வாழ்த்தும் 10.30 12.00 ஆகியது! முனைவர் திருமிகு. பி.தமிழகனார் கரணத்துணை.

**தமிழன் நினைத்தால் ஒன்றுபட்டால் இழப்புகளை மீட்டெடுக்க முடியும் என்பதைக் காட்டும் நிகழ்ச்சி.**

யான், புரட்சிக்கவிஞர் மன்றத் தலைவர் வண்டியில் சென்று, மண்டபம் சென்று உணவு கொண்டு, தங்கல் விடுதியில் தங்கி - மீண்டும் தஞ்சை வந்து, நான்காம் தமிழ்ச்சங்கச் செயலர் தமிழ்த்திரு. **ச. மாரியப்பமுரளியார்** வண்டியில் திருநகர் இல்லம் சேர, ஒரு சல்லியும் என் செலவில்லை எனக்கு வரவோ அனைத்தும் வரவுதானே! அதனால் '**நம் முன்னவர் வாழ்வு** என்னும் நூலை, '**தமிழால் வந்தது தமிழுக்கே** என அச்சிடவாய்த்தது. மணமக்கள் அருமை இணையர் இனியா - முருகன் (கார்த்திகேயன்) **வாழ்வு சிறக்க! உளம் ஓங்குக. நல்ல தமிழ் வாழ்வு வாழ்ந்து எடுத்துக் காட்டாகத் திகழ்க** என வாழ்த்துகிறேன்.

தஞ்சையில் **மர். மருதுதுரையார்** குடும்பத்திருமணம் நெய்வேலி மருத்துவர் என் இனிய பேரா. அ. செந்திலார் ஏற்பாடு! அதில் கலந்து கொண்டவர் **மர். பாரதி செல்வனார்!** தூண்டல்கள் எப்படித் துலங்கலாகின்றன. என்பதன் எடுத்துக் காட்டு இந்நிகழ்ச்சி! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

இரா. இளங்குமரன்

# முன்னவர் வாழ்வியல்

## முன்னவர்

முன்னவர் என்பவர், தொல்பழங் காலத்தவர் அல்லர். சில நூற்றாண்டுகளுக்கு முந்தியவரும் அல்லர். என் கண் காண வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டினர். இந்திய உரிமை வேட்கைக் காலத்தவர்! ஆங்கில ஆட்சிக் காலத்தவர்; முதல் உலகப்போர் இரண்டாம் உலகப்போர்க் காலத்தவர்! விடுதலைக்கு முற்பட்டு, அவ்வெளிச்சம் வரும் என்னும் நம்பிக்கைக் காலத்தவர். பேராயக்கட்சி அன்றி வேறு கட்சி தெரியாதவர்.

## வாழ்வியல் - தொழில்

உழவு, தச்சு, கொல்லு, சலவை, முடி திருத்தல் என்பவை செய்பவர் வேறுபாடு இல்லாமல் அவரவர் கடமையைச் செய்தனர். நிலம் உள்ளவர், பெருநிலம் உள்ளவர், கூலிவேலையர் என்போருள் அற்றைக் கூலியர், பதிவுக் கூலியர் என இருவகையர் எல்லா ஊர்களிலும் வாழ்ந்தனர். ஊர் சார்ந்து சேரி இருந்தது; தோல் தையலர் வாழ்ந்தனர்.

நெய்வோர், குயத்தொழிலர், பொன் வேலையர், கட்டுமானத் தொழிலர் எல்லா ஊர்களிலும் இருந்தார் அல்லர். மண்சுவர் கூரை போடுவார் படைப்பு ஆக்குவார் ஊர்தோறும் இருந்தனர். கொத்தனார் வேலையர் சற்றே பெரிய ஊர்களில் வாழ்ந்தனர். பொன்வேலை செய்யும் தட்டார் வளமான ஊர்களில் இருந்தனர். தங்கம் தந்து வேலை செய்பவர் அல்லாமல் அவர் தங்க விற்பனையோ, செய்பொருள் விற்பனையோ செய்வார் அல்லர். குயவர் குடியிருப்பு பெரிதும் நீர்வளம் சார்ந்த ஊராக இருந்தது. கலங்கள் வனைதல், தெய்வ உருக்கள் செய்தல், ஊர்திகள் வனைதல், வண்ணந் தீட்டல் எனச் செய்தனர்.

நெசவாளர் இருப்பு அகல் நெடுந் தெருவாக இருக்கும். பாவு போடல், சாயம் ஏற்றல், தறி நெய்தல், கண்டு சுற்றல், உலரப்போடல் எனத் தனித்தனி வேலைகளின் கூட்டு வேலையாக நெசவு நடந்தது. சொந்தத் தறி உடையாரும், கூலிக்கு வேலை செய்வாரும், தனியே சாயப்பட்டறை வைப்பாரும் ஒப்பந்த வேலையரும் என அவர்கள் இருந்தனர்.

ஊரூர்க்குத் தச்சர் கொல்லர் இருந்தனர். மிகச் சிற்றூர்கள் எனின் அடுத்துள்ள ஊரவரை நாடவே நேர்ந்தது. எச்சிற்றூரிலும் சலவையர் இருப்பார். ஆனால் முடி திருத்துவார் எல்லா ஊர்களிலும் இரார். இரண்டு மூன்று ஊர்களுக்கு ஒருவர் முறைவைத்து வேலை செய்தல் உண்டு. இவர் தம் குடும்பப் பெண்கள் மகப் பேற்று மருத்துவம் பார்ப்பர்; இவர்கள் பொது மருத்துவம் செய்வர். அறுவை மருத்துவம் செய்வர். அதனால் பண்டுவர், மருத்துவர் என இவர்களை வழங்குவதும் உண்டு. முடி திருத்தும் போதே ஊர்ச்செய்திகள் பலவும் அவர் அறிந்து கொள்வதால் 'நாவிதர்' எனவும் மக்களால் வழங்கப்பட்டார். குடிமகன் என்பதும் அவர் பெயரே.

குறிப்பிட்ட தச்சர், கொல்லர், சலவையர், முடிதிருத்தர் ஆயோர்க்கு அவ்வப்பொழுதே கூலி தரும் வழக்கம் இல்லை. சுதந்திரம் (உரிமை) என்னும் 'விளைவு காலக் கொடை' அல்லது ஆண்டுக் கொடை என உண்டு. முடிவெட்டல் முகம் வழித்தல் இரண்டுமே முடிதிருத்தர் செய்தனரே அன்றி, அவரவர் மழித்துக் கொள்ளும் வழக்கம் உண்டாகவில்லை. ஊர் மரத்தடி அல்லது கொட்டகை அவர்கள் பணிக்களம். ஊரில் ஆளுமையும் வளமும் உடையவர் வீடுகளுக்குப் போய்ப் பணி செய்வதும் உண்டு.

தச்சர் கொல்லர் வீட்டுப் பகுதியே தொழிலிடமாகவும் இருக்கும். உழவுத் தொழிலுக்கு அவர்கள் பணி இல்லாமல் முடியாது. ஆதலால், சிற்றூர்களிலும் ஒரு குடும்பமாவது இருக்கும். சலவைத் தொழிலரும் சிற்றூர் எனினும் ஒரு குடும்பம் இருக்கும். மற்றைத் தொழிலர்க்கு இல்லாத ஒரு வழக்கம் அவர்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும் சோறு

வாங்கிக் கொள்ளுதல். அவ்வாறு வாங்குபவர் பெண்களாகவே பெரிதும் இருப்பர். துணி எடுப்பதும் சலவை செய்தபின் கொடுப்பதும் அவர்களாகவே இருப்பர். பொதி சுமக்கக் கழுதை உண்டு; வெள்ளாவி போட முள், விறகு வெட்ட, வெட்டரிவாளும், முள்ளைத் தூக்கக் கவைக்கம்பும் வைத்திருப்பர்.

விடிந்தும், விடியாமலும், சலவைத் துறைக்குச் சென்றுவிடுவர். நீரில் நனைத்து அடித்து உவர்மண் கரைசல் நீரில் தோய்த்துப் பிழிந்து முறுக்கி வெள்ளாவியூட்டி மீளவும் துவைப்பர்; வெள்ளையாட்டுப் புழுக்கையைக் கரைத்து துணிகளை அதில் அலசி மீளவும் நல்லநீரில் தோய்த்து எடுத்துக் காயவிட்டு மடிப்பர். தனியே சிலர்க்குச் சட்டைத் துணிகளைத் தேய்த்துக் கொடுத்து அன்பளிப்புப் பெறுவர். அன்று செய்த சலவை, அன்றே கொடுக்கப்பட்டு விடும். சிலருக்கு உடுமாற்று இல்லாமல் அழுக்காகக் கட்டியிருப்பர்; அத்தகையர்க்கு மாற்றுடை தந்து சலவை செய்வதும் உண்டு. மாற்றுடை இல்லாதார் உடையில் ‘சீலைப்பேன்’ என்னும் பேனும் உண்டாகி விடுவதும் உண்டு.

கதிர் எழுகாலையில் எழுந்து பணி செய்வாரை ‘எழுகாலி’ என்று வழங்கி ‘ஏகாலி’ எனப்பட்டார் என்பது புலமையர் வழக்கு. கழுதைக்கு நான்குகால்; அவர்க்கு இரண்டு கால்; கவைக்கம்புக்கு ஒருகால். ஆக ஏழுகால் உடையவர் ஆதலால் எழுகாலி, ‘ஏகாலி’ ஆனார் என்பது பொதுமக்கள் வழக்கு. ஊர்ச் செய்திகள் அனைத்தும் அறிந்த ஒருவர் ஊரில் உண்டு என்றால் அவர் சலவையர் மகளிரே ஆவர். வண்ணாரப்பேட்டை எனப் பெருநகரங்களில் தனிப்பகுதிகளே இருந்தன. சிற்றூர்களில் ஒற்றைக் குடும்பமே பெரிதும் இருக்கும்; அதுவும் ஊர் நடுவேயும் இருக்கும்.

இவர்களுள் தொடுதல் தீட்டு, மேல்கீழ்ப் பிரிப்பு இல்லை. முறைகொண்டு அழைத்துக் கொள்ளலும் உண்டு என்பர். சலவையர் முறைவைத்துக் கொள்ளும் வழக்கம் யான் அறிந்ததில்லை.

உழவுத்தொழில் குடும்பத்தொழில். அவரவர் குடும்பமே அத்தொழிலைச் செய்யும். நடவுபோடல், அறுவடை செய்தல், களை பறித்தல், களவேலை என்பவற்றுக்குக் கூலியாள்களை வைத்துக் கொள்வர். ஆண்டு ஒப்பந்தக் கூலியர் உண்டு.

அறுவடை, களமடிப்பு, நிலம் ஒப்புரவு செய்தல் என்பவற்றுக்கு மொத்தமாகக் கூலி பேசி வேலை வாங்கும் மேலாள்களும் இருந்தனர்.

ஒற்றைமாடு உடையவர் மற்றொரு மாட்டை உடையாரொடு கூட்டுச் சேர்ந்து இருவர் நிலங்களிலும் பயிரிடலும் உண்டு.

ஓரேர் உடையார் மற்றும் ஓர் ஏருடையாரைக் கூட்டுச் சேர்த்துக் கூட்டோர் வைத்து உழுதல், விதைத்தல் உண்டு. விதைக்கும் திறம் எல்லார்க்கும் வாராது. நிரவலாக விதைக்க வல்லாரை அழைத்து விதைப்பது வழக்கம்.

அறுவடைக்குப் பின் குப்பை அடித்துச் சிதறுதல், ஏரி குளங்களில் படிந்த கரிசல், சவட்டுமண் ஆயவற்றை அள்ளி வண்டியில் கொண்டு வந்து போடுதல் மாட்டுக் கிடைபோடுதல் என்பனவும் நில உரவளமாக இருந்தது. ஓர் இரவு கிடைக்கு இவ்வளவு எனக் கூலியும் உண்டு. அரிதாக வாத்து அடைப்புகளில் கிடைபோடுதலும் நடைபெறும்.

வயல்நிலத்தில், நீர்கட்டி உழுது ஓரம் வெட்டி பசுந்தாள் உரமாகிய குழையைப் போட்டு மிதித்துப் பரம்படித்துப் பண்படுத்தியே நடவு செய்வர்.

நாற்றங்கால், நடவுநிலம் எனத் தனித்தனியேயும், நிலத்தின் ஒரு பகுதியாகவும் இருப்பது உண்டு.

களத்தடிப்பின் போது அத்தொழில் செய்தவர்க்கு உரிய கூலி தருவதுடன் தச்சு, கொல்லு, முடிதிருத்தல், சலவை செய்தல் ஆகியவை செய்தார்க்குரிய சுதந்தரம் (உழைப்புரிமை) வழங்கலும், களம்பாடுவார், இரவலர் என்பார்க்குக் கொடுத்தலும் முடித்து, மூடை போட்டு விளைவு வீடுவந்து சேரும்.

களஞ்சியம், குதிர் என்பவற்றில் அவற்றைப் பூச்சி அரியாவாறு வேப்பிலை போட்டு மூடி வைப்பர்.

## கடைகள்

சிற்றூர் எனினும் ஒன்றிரண்டு பலசரக்குக் கடைகள் இருக்கும். பக்கத்துப் பேரூர்களில் கூடும் சந்தைக்குச் சென்று நிரம்ப வாங்கி வருவாரும் உண்டு. அன்றன்று சம்பளம் ஆகிய கூலி பெறுவார், அற்றைக் கூலியர். அவர், உள்ளூர்ச் சிறுகடைகளிலேயே வேண்டியதை வாங்குவர். பெரும்பாலும் பண்டமாற்றே வணிகமாக இருந்தது. பருத்தி, தவசம் ஆகியவற்றைத் தந்து வேண்டும் சரக்குகளைக் கொள்வர். பொருள்களை வாங்கி முடித்தாலும் ஒரு சருகு (வெற்றிலை) என்றோ கடுகு, மிளகு என்றோ கேட்டு ‘ஓசி’ (இலவயம்) வாங்காமல் போகின்றவர் அரிதாகவே இருப்பர்.

சிறிய கடை ஆனாலும் மூன்று சரக்கு (வெற்றிலை, பாக்கு, புகையிலை) பீடி, தீப்பெட்டி, பத்தி, சூடம், பருப்புவகை, அரிசி தவச வகை, பலசரக்கு வகை, சம்பை (கருவாடு) வகை, தேங்காய், உள்ளி, உப்பு எனப் பலவும் இருக்கவே செய்யும்.

கடைக்காரர் ஒருவராகவே இருப்பார்; எடுபிடி ஆள் இருந்தால் சற்றே பெரிய கடையாக இருக்கும்; குடும்பத்துப் பெண்கள், பிள்ளைகளே துணையாகவும் மாற்றாகவும் இருப்பர்.

## ஊர்க்கட்டு

சில ஊர்களில் நல்ல கட்டுப்பாடுகள் உண்டு.

கள்ளுக்கடை, சாராயக்கடை வைக்கக்கூடாது.

எங்கும் குடித்துவிட்டும் வரக் கூடாது.

எந்தக் கட்சிக் கொடியும் ஏற்றக்கூடாது.

ஊர்க் கட்டுப்பாட்டை மீறக் கூடாது.

ஊர்ப் பொதுக் கூட்டத்துக்கு வரத்தவறக் கூடாது.

- என்பவை சில.

## ஊர்த்தோப்பு

ஊர்த்தோப்பிலும் ஊர் மடங்களிலும் முதியர் இளையர் எனப் பலரும் உரையாடல், விளையாடல், படுத்திருத்தல், பதினைந்தாம் புள்ளி, தாயம் என இருந்தாடல் பலவும் நிகழும். ஊர்க்கதைகள் பலவும் பேசப்படும். அவர்கள் பொழுதுபோக்குக்கு வேறுவழி இல்லையே! திருமண வீடுகளில் முதல்நாள் வேலை முடித்துச் சீட்டு ஆடுவாரும் ஊர்க்கதை பேசுவாரும் இருந்தனர்.

## ஊர்மடம்

சிறிய ஊர் எனினும் ஊர்மடம் என ஒன்று இருக்கவே செய்யும். அந்த மடத்தில் தண்ணீர்ப்பானை, தகரக்குவளை இருக்கும். ஈயம் பூசிய பித்தளைக் குண்டா, மூடி, சிறுதூக்கு, செம்பு எனச் சிலவும் இருக்கும்.

வெளியூர் வழிப்போக்கர் அம்மடங்களில் தங்கி விடியலில் புறப்பட்டுச் செல்வர். அவர் இரவுவேளையில் பசித்திருக்கக் கூடாது என்பதற்காகக் குண்டா தூக்கு முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஆங்குப் படுத்திருக்கும் சிறுவர்களை ஏவி ஊருக்குள் 'தருமச் சோறு' எனக் கேட்டு வாங்கிவந்து, ஆங்கிருக்கும் உலர்ந்த வாழை இலைச்சருகில் போட்டு உண்ணச் செய்வர். சோறு வழங்கிய வீடுகளில் பழைய குழம்பு, தொடுகறி, ஊறுகாய் எனக் கேட்டு வாங்கிவந்து பசியாற்றி, இந்நாளிலும் ஆபுத்திரனும், மணிமேகலையும் உளர் என்பதை மெய்ப்பிப்பர். அவர்கள் ஆபுத்திரனையோ, மணிமேகலையாரையோ அறிந்து செய்தாரல்லர். வழிவழி வழக்கத்தாலும் பரிவாலும் செய்யும் செயலாகச் செய்தனர்.

## பாராயணம்

சில ஊர்களில் பாரதம், இராமாயணம், பாகவதம் எனப் பாராயணம் இரவுநேரங்களில் நிகழும். வெளியூரில் இருந்து வரும் புலவர், தமக்குக் கையேடு படிப்பாருடன் வந்து, ஊர்ப் பெரியவர்களைக் கண்டு அவர்கள் ஒப்புதல் பெற்று ஊர் மடத்திலோ

வேறு பொது இடத்திலோ கண்ணாடித் தூக்கு விளக்கு ஒளியில் கையேடு படிப்பார் படிக்க, புலவர் அதற்கு விரிவுரை கிளைக்கதை எனச் சொல்ல இரவு பன்னிரண்டு மணிவரை நிகழும். ஆண்கள் பெண்கள் முதியவர் இளையவர் என எல்லாரும் கூடியிருப்பர். ஓரங்களில் பாய், துப்பட்டி விரித்து உட்கார்ந்து கேட்டவர் அப்படியே உறங்கிப் போவதும் உண்டு! பாராயணம் முடிந்தது சொல்லி, எழுப்பிக் கொண்டும் போவர். ஒரு மாதம், நாற்பது நாள் எனப் பாராயணம் செய்துமுடித்து நிறைவில் முடிசூட்டு (பட்டாபிகேசம்) விழா நிகழும். புலவர்க்குப் பொதுவிலும் தனிப்படவும் பணம் - வேட்டி - துண்டு - மாலை என வழங்கிச் சிறப்பிப்பர்.

புலவர், பின்னர் அடுத்த ஊரை நாடுவார். இங்குப் பாராயணம் நடக்கும்போதே இதை முடித்து அங்கே வந்து பாராயணம் செய்யும் அழைப்பும் காத்திருக்கும்! சிற்றூர்களில் தம்மால் இயன்ற அளவு தமிழ் வளர்த்ததில் பாராயணப் புலவர்களுக்கு ஒரு பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

## ஊர்விழா

ஊர்விழாக்களில் இரண்டு விழாக்கள் சுட்டத் தக்கவை. அவை, குலதெய்வ வழிபாட்டு விழா, பொங்கல் விழா.

ஊரூர்க்குக் கோயில் உண்டு. பெரும்பாலும் அம்மன் கோயிலாகவே இருக்கும். மாரியம்மை, காளியம்மை முதலாம் கோயில்கள் ஐயனார் கோயில் முனியப்பன் கோயில் முதலியவை இருக்கும். பிற்பட்டதாயினும் பிள்ளையார் கோயில் இல்லாத ஊர் இராது. ஏனெனில், ஒரு வேப்பமரமும் ஓர் அரசமரமும் இருந்தால் போதுமே. பெருமாள் கோயில் சிவன் கோயில் என்பவை பெரிய ஊர்களிலேயே காணப்படும். மூணுசாமி (மூன்று), முனியப்பன், மாடசாமி, சக்கம்மா, பிடாரி அம்மன் என்பனவும் காணலாம்.

இக் குலதெய்வ வழிபாடு நிகழுமுன் ஊர்க்கோடித் தெருக்களில் காப்புக் கட்டப்படும். காப்பு என்பது வேப்பங்குழைத் தோரணமாகும்.

காப்புக் கட்டியதன்பின் உள்ளூரார் அயலூர்க்குப் போனால் பகலிலேயே வந்தாவர்; இராத்தங்கல் ஆகாது. அவ்வாறே வெளியூரார் வந்தாலும் இரவு தங்குதல் கூடாது. பகலிலேயே போய்விடுவர்.

கோயிலைச் சுற்றிப் பின்பக்கம் தவிர, முப்பக்கமும் வரிசைவரிசையாக அடுப்புகள் வைத்து (மூன்று கற்களை ஆய்தப்புள்ளி போல் வைத்து)ப் பொங்கலாக்குவர். பொங்கியதும் குரவை இட்டு இறக்கித் தெய்வத்திற்குப் படையலிட்டு உள்ளூரார், வெளியூரார் அனைவரும் உண்பர்.

கடாவெட்டு, சேவல் பலி நடைபெறலும் எருமைப் பலி இடலும் கூட நடத்தும் ஊர்கள் உண்டு. மொட்டை இடலும், மொட்டைத் தலையில் தேங்காய் உடைத்தலும், பூக்குழி இறங்கலும் முளைப்பாரி வைத்தலும் வேட்டுப் போடலும் அவ்வவ்வூர் வழக்கப்படி நிகழும்.

பல ஊர்ப் பொதுக்கோயில் என்றால், இன்ன ஊர்க்கு இவ்வளவு தொலைவு, இப்பக்கம் எனப் பொங்கல் வைக்கப் பகுத்தலும், இன்ன ஊர்க்கு இன்ன நாள் என முடிபு செய்து வழிபடலும் வழக்கமாகும். கயிறுகுத்தல், வலம்புரளல் நேர்த்திக்கடனாகச் செய்வதும் வழக்கம்.

பந்தம் வீசல், சிலம்பாட்டம், கரகாட்டம், வில்லடி என ஊரார் ஏற்பாட்டுப்படி நிகழும். பாவைக் கூத்தும், நாடகமும் சற்றே பெரிய ஊர்களில் நிகழும். தேரோட்டமும் உண்டு.

சொக்கப் பனை கொளுத்துதலும் வழக்கு. சொக்கப்பனை என்பது ஒரு பனை நட்டு, சோளத் தட்டைக் கட்டுகளைச் சுற்றிச் சார்த்தித் தீமூட்டலாம்!

கோயில் வழிபாட்டுக்குப் புலவர், பூசாரி, பண்டாரம் எனத் தமிழரே இருப்பர். சாமியாடிகளும், குறி சொல்பவர்களும் காணப்படுவர். உடுக்கடித்துச் சாமி இறக்குவார், கொட்டு முழக்கம் என்பவையும் தலைகாட்டும்.

# பொங்கல் விழா

வெவ்வேறு ஊர்களிலிருந்து பொங்கல் விழாவுக்கு அழைக்கப்பட்டிருப்பர். அவர் வருகையும் மகிழ்வும் எடுப்பு கொடுப்பு ஆகிய மணவிழாக்கள் நிகழ வாய்ப்பாகவும் அமையும். சிற்றூர்களில் நடைபெறும் விழாக்களுள் பொங்கல் விழா சிறப்பானது.

காட்டிலும் கழனியிலும் போட்டது விளைந்து பயன் வரும் மகிழ்வான காலம். அதனால் பொங்கல் என்பதற்கு மகிழ்ச்சி என்னும் பொருளும் உண்டாயிற்று. தென் எல்லை சென்ற கதிரவன் வடக்கே திரும்பும் நாள் தைப் பொங்கல் நாள். மழைப் பருவம் முடியும் மார்கழி மாதம் சமய ஈடுபட்டாளர் விடிபொழுதில் பாவைப்பாட்டுப் பாடுவதும் ஊர்வலமாக வருவதும் உண்டு. தைப் பிறந்தால் வழிபிறக்கும் என்பது போல் திருமணங்கள் நடைபெறல் மிகுதி.

பொங்கல் மூன்று நாள் நிகழும். முதல்நாள் வீட்டு முற்றத்தில் வைக்கும் கதிர்ப் பொங்கல் அல்லது மனைப் பொங்கல். இரண்டாம்நாள் மாட்டுத் தொழுவத்தில் வைக்கப்படும் மாட்டுப் பொங்கல். மூன்றாம் நாள், காணும் பொங்கல் என ஒருவரை ஒருவர் கண்டு மகிழும் பொங்கல். அன்று மஞ்சு வெருட்டு எனப்படும் சல்லிகட்டும் நிகழும். பழங்கால ஏறுதழுவுதல் வழியது அது.

புதுமாப்பிள்ளை பெண் அழைப்பு உண்டு. புத்துடை அனைவரும் பூண்பர்.

மாவிலை, பூளை, வேப்பந்தழை ஆகியவை வீடு, தொழு, கிணறு, காடு எனக் காப்புக்கட்டுதல் என முதல் நாளே நிகழும்.

பொங்கலுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை என நடைபெறும். அது போகியாம் இந்திரனை நோக்கி எடுக்கப்பட்ட விழாவின் வழியது. ஆனால், அப்பொருள் மறைந்து, பழைய பொருள்கள் ஆகாப்பொருள்கள் ஆகியவற்றை அகற்றுதல், வீட்டைத் தூய்மை செய்தல், வண்ணம் தீட்டுதல், வெள்ளையடித்தல் என்பவை நிகழும்.

மாடுகளுக்கு மூன்றுநாள்களும் நல்ல ஓய்வு. குளிப்பாட்டல், கொம்புக்கு வண்ணம் தீட்டல், நல்ல தீனிகள் தருதல் என்பவை நடைபெறும். கரும்பு, மஞ்சள் குலை, வாழை நட்டல் என்பவை வீடுதோறும் இருக்கும். கட்டுக்கட்டாகக் கரும்பு விற்பனையும் இருக்கும். அது செங்கரும்பு; உரித்துத் தின்னத்தக்க மென்மையானது.

கொலை இல்லா - புலவூண் கொள்ளா - விழாவாகப் பொங்கல் இருந்தது. கடைசிநாளில் கரிநாள் என்பதைக் கறிநாளாகக் கொண்டு புலாலாக்கலும் தலைகாட்டலுண்டு.

## கார்த்திகை விழா

இனிக் 'கார்த்திகை' விழா முருகனை நோக்கி எடுப்பது. அதுவே தமிழகத்து நிகழ்ந்த பழமையான விழா. அன்று, மாலைப் பொழுதானதும் வீடுதோறும் 'கிழியஞ்சட்டி' விளக்கு வரிசையைக் காணலாம்.

தீபாவளியும் கொண்டாடப்படும். நகரங்களைப் போல் சிற்றூர்களில் அவ்விழா பெருக நடைபெறாது. இட்டவி தோசை போடுவர். முறுக்கு வடை அதிரசம் முலான பண்டங்கள் பக்கத்து வீடுகளுக்கும் கொடுக்குமாறும் பலநாள்களுக்கு இருக்குமாறும் செய்வர். எண்ணெய் நீராடல் உண்டு. புலாலும் விளையாடும். தீபாவளி அழைப்பு எனப் புதுமண மக்கள் அழைக்கப்படுவர்.

## மழைக்கஞ்சி

மழையற்று வெப்புமிக்க காலத்தில் மழைக்கஞ்சி எனக் கூழ் ஆக்கிக் குழந்தைகளுக்கு வழங்கி வெருட்டுவர். அவர்கள் 'ஆ, ஓ' எனக்கத்திக் கொண்டு ஓடுவர். அதனால் மழை பெய்யும் என்பது அவர்கள் நம்பிக்கை. மழைக்காகக் கோயிலில் குளுமை சொரிதல் என மாவிளக்கு ஏற்றி வழிபடலும் வழக்கம்.

தைப் பொங்கல் பழமை தொட்டு நடப்பது; வாழ்த்து அனுப்புதல், திருவள்ளுவர் நாள் எனக் கொண்டாடுதல் பிற்பட்ட

வழக்காகும். சிற்றூர்களில் ஊரவரே நாடகம் போடல் உண்டு. பெண்கள் கும்மி குரவை உண்டு. பள்ளிகளில் கோலாட்டம் நிகழும்.

## பொழுதுபோக்கு

கழைக்கூத்து, பாவைக்கூத்து, பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை, புலியாட்டம் சில வேளைகளில் வெளியூர் நாடகக் குழுவார் நடிப்பு என்பவை நிகழும்.

வெளியூர்க்காரர்கள் காவடி எடுத்து ஊரூர்க்குக் காவடிச் சிந்து பாடிக் கொண்டு வருவதும் ஊர்ப் பொதுவிலும், தனிப்படவும் காசு பணம் வாங்கல் உண்டு. இராப்பாடி எனக் கம்பளத்தார் இரவில் வீடு வீடாகத் தெருவில் வந்து குறி கூறுவதும் பகலில் வந்து தவசம் காசு என வாங்குவதும் உண்டு.

## ஒப்புரவு

சிற்றூர் வாழ்க்கையில் சிறந்த ஒன்று ஒப்புரவு வாழ்வு. ஏழை பாளை செல்வர் கடைக்காரர் என இருந்தாலும், ஊரில் விளங்கிய ஒப்புரவு வாழ்வு இன்றும் என்றும் காண்பதற்கு அரிதாகிவிட்டது. நகர வாழ்க்கையோ பதவி, பணம், ஒப்புக்குப் பழகல், அலுவலக ஓட்டம், நடை, வண்டி வாய்ப்பு, அடுக்குமாடி; யாரையும் யாரும் கண்டு கொள்ளாமை; கண்டு கொண்டாலும் தேவைக்கு உறவு; உதட்டளவுப் பேச்சு; பரபரப்பு, போலிமை எனப் போகிவிட்டது.

சிற்றூர் வாழ்வு எளிமை, அமைதி, பகட்டில்லாமை, உள்ளம் ஒன்றிய உறவு, ஒவ்வொருவரையும் ஒவ்வொருவரும் அறிந்து கொண்ட நெருக்கம், முறை வைத்துப் பேசுதல், எவர் வெளியே இருந்து வந்தாலும் எந்த வீட்டுக்குப் போகிறார் ஏன் போகிறார் என்ற எச்சரிப்பு, என்பவை உள்ளிருந்து வரும்.

உரையாடல், பகட்டில்லாத - பரபரப்பில்லாத - வாழ்க்கை, களவு செய்தலோ, கரவு வாழ்வு வாழ்தலோ நடமாடுதல் இல்லாத உண்மை, ஒரு வீட்டுக்கு ஒரு வீடு ஒத்தாசையாக இருத்தல், உற்றார் உறவு முட்டினாலும் மூன்றாமவர்க்கு விட்டுத் தராமை, பெரும்பாலும்

படிப்பறிவின்மை, கற்றோரை மதித்தல், பழமையான கண்மூடித்தன நம்பிக்கை, குடிசை வீடுகள் எனினும் திண்ணையமைப்பு, வீட்டுள் கழிப்பறை அமையாமை, பள்ளியில்லாத பல ஊர்கள், அதிகாரிகளுக்கு குறிப்பாகக் காவல்துறைக்குக் குலைபதறும் அச்சம், கடன் கைம்மாற்று, அடைவு போடல், ஆடு மாடு கோழி வளர்ப்பு என வாழ்ந்தநிலை. நிலவு வெளிச்சத்தில் உண்ணல், அடுத்தவீட்டில் நெருப்பு வாங்கி அடுப்பெரித்தல், செல்வர் வீடுகளில் குழந்தைகளுக்குச் சோறு வாங்கல், கைம்மாற்றாக அரிசி பருப்பு வாங்கல் என்பவை எல்லாம் காணக் கூடிய வறுமைநிலை.

## குடிகேடு

குடிக்கும் ஊர்க்கும் குடிப்பிலா ஊர்க்கும் வெளிப்படத் தோன்றும் வேறுபாடு உண்டு. அதேபோல், படித்து அரசு வேலைக்குச் சென்றவர் மிக்கவர் ஊர்க்கும், அரசு வேலைக்குப் போகாமல் உழவு, கூலி என வாழ்ந்தவரே உள்ளவர் ஊர்க்கும் வேறுபாடு உண்டு. குடியாதவர் வாழும் ஊரிலும், அரசு வேலை பார்ப்பவர் மிக்க ஊரிலும் காணப்படும் வேறுபாடு முறையே கூரை வீடுகளைக் காணமுடியாமையும் கெட்டிக் கட்டடமே இல்லாமையுமாம்!

அதேபோல் உழைப்பு மிக்கவர் நிலமும், உழையார் நிலமும் பார்த்த பார்வையில் வெளிப்பட்டு விடும். நிலப்பண்படுத்தம், பயிர்நிலை, விளைவு நிலை, மாடுகளின் நிலை என்பவை அவை.

## களவில்லாமை

"கள்வார் இலை காப்பாரும் இல்லை" என்பதும்,

"களமலி குப்பை காப்பில வைகவும்" என்பதும் கற்பனை இல்லா உண்மை காட்டிய காலம் அது. ஊர்க்கட்டில் ஊர் இருந்தது, ஊராளி, ஊர்த்தலைவர் என்பார் ஆணையில் ஊர் இருந்தது.

100, 120 மூடை கடலை, நெல் ஆகியன களத்தில் காயப் போடப்பட்டாலும் உலர்த்தும் வேலை அன்றிக் காவல் வேண்டா!

ஆடு மாடு தின்னாமல் பார்க்க ஒருவர் போதும். இரவும் பேருக்கு ஒருவர் படுத்திருப்பார்.

உழவர்கள் ஏர், இறைவைச் சால், வடம், கயிறு முதலியவை அங்கேயே கிடக்கும். திருடு போகாது.

பெரும்பாலான வீடுகளில் இரவும் கதவு சார்த்தப் படுவது இல்லை. வெயில், காற்று, மழையெனச் சார்த்துதல் அன்றிப் பாதுகாப்புச் சார்த்துதல் இல்லை. மாட்டுத்தொழுவம் கதவு அற்றது, தெருவிலேயே மாடுகள் ஆடுகள் கட்டப்படுவதுண்டு. இயல்பான காலங்களில் தெருவிலேயே கட்டில் பாய் போட்டு ஆண்களும் பெண்களும் இரவில் படுத்திருப்பர். நிலவில் அமர்ந்து பெரியவர்கள் சாப்பிடுதலும், சிறுவர் சிறுமிகள் 'கூட்டாஞ் சோறு' என அவரவர் வீட்டில் இருந்து கொண்டு வந்த சோற்றைப் பாடியும் பேசியும் மகிழ்வாக உண்பதும் பெருவழக்கம். அவ்வாறே நிலவு வெளிச்சத்தில் கும்மி பாட்டு, நொண்டியடித்தல், கிளித்தட்டு எனச் சிறுவர் சிறுமியர் விளையாட, பெரியவர்கள் பார்த்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பதும் வழக்கம். வெளிச்ச நாளில், பேருக்கு விளக்கேற்றல் அன்றி நெடும்பொழுது விளக்கு எரிக்கமாட்டார். சில பெரிய ஊர்களில் தெருவிளக்கு இருள் காலங்களில் உண்டு.

## ஊர்க்கூட்டம்

ஊரில் நல்லது பொல்லது நடக்கும் போது ஊர்க்கூட்டம் கூட்டப்படும். ஊர்க்கூட்ட அறிவிப்பு ஊர் சாற்றல் (ஊர் சாட்டல்) எனப்படும். சில ஊர்களில் தமுக்கடிப்பர். அதற்கெனத் தோட்டி என்பார் உண்டு. அவர் ஊர்ப் பொதுவுக்கு அமைந்தவர். உறவு ஊர்களுக்குச் சென்று திருமணம் - இறப்புச் செய்தி கூறுபவரும் அவர். ஊர் காவல் ஏரி காவல் என்பனவும் செய்வார்.

ஊரூர்க்குத் தலைவர், நாட்டாண்மை, மூப்பர் என இருப்பர். அவர்கள் தலைமையிலேயே ஊர் நிகழ்ச்சி நடைபெறும். அவர் படித்தவர் எனினும் படியாதவர் எனினும் குடியர் சூதர் எனினும்

ஊரவைக்கு வந்து விட்டால் நேர்மை தவறாமல் முறை சொல்வார். அவர் சொல்லை மீற முடியாது. ஓரூர்த் தலைவர் தம் செல்வாக்கால் பல ஊர்களுக்குச் சென்று வழக்குத் தீர்ப்பதுண்டு. கூண்டு வண்டியில் முன்னும் பின்னும் காவலர்கள் சூழச் சென்று வழக்குகளைத் தீர்ப்பார்.

மிகச் சின்ன ஊர்களில் மரத்தடியே கூட்டம் நிகழும் இடமாக இருக்கும். கொஞ்சம் பெரிய ஊர்களில் ஊர்மடம், பொதுச் சாவடி என்பவை உண்டு. பெரிய கோயில்கள் உள்ள ஊர்களில் சத்திரம் என்பவை உண்டு. வழிப்போக்கர்க்குச் சத்திரத்தில் சாப்பாடு போடுவர்.

## பள்ளிகள்

ஓரளவு கற்றவர், ஊர்களில் திண்ணைப் பள்ளிகள் நடத்தினர். பெரும்பாலும் மனப்பாடம் - ஒப்பித்தல் - கணக்கு - தமிழ் என்பவை மட்டுமே கற்பிக்கப்பட்டன. தொழில் செய்வதற்குத் தக்க அளவு கல்வி. கணக்கு எழுத என்ற அளவில் கற்றுத்தரப்பட்டது.

புலமை மிக்கவர் ஊரில் இருந்தால், அவர் கற்ற நூலைக் கற்பதற்காக வெளியூரிலிருந்து வந்து தங்குவது உண்டு. உறவினர் வீடோ உதவுவார் வீடோ அவர் உணவுக்கு வகை செய்யும். அப்படித் தேடிப் போய் ஊர் ஊராகக் கற்றவர் பின்னே பெரும் புலவர்களாக விளங்கினர். அவர்களே கற்பிப்பவர்களாகவும் செயல்பட்டனர். பள்ளிக்கூடத்திற்கு வைப்பது (படிக்க அனுப்புவது) ஒரு விழாப் போல நிகழும்.

### பள்ளிக்கு வைத்தல்

புதிய வேட்டி உடுத்து, இடுப்பில் துண்டு கட்டி, தலையை வாரிச் சடை போட்டு, தண்டை காப்பு அணிந்து பள்ளிக்கு விட்டனர். ஒன்பான் விழாவன்று பள்ளிக்கு வைத்தல் வழக்கம்.

ஆசிரியர்க்கு வழங்குவதற்குப் பழம், பூ, வேட்டி துண்டு, சந்தனம், கற்கண்டு எனக் கொண்டு போவதுண்டு. கொட்டு முழங்க, குரவை (குலவை) பெண்கள் இட, மரக்கால் (அ) நாழியில் அரிசியோ நெல்லோ கொண்டு போவது உண்டு.

பள்ளியில் முந்திய மாணவர் பிந்திய மாணவர்களுக்கு ஆனா, ஆவன்னா, வாய்பாடு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவற்றை முன்னே சொல்ல பின்னே சொல்லி வரப்படுத்துவர்.

மணலில் எழுதும் பயிற்சி பெரிய மாணவர்களால் தரப்படும். படிப்பு மனப்பாடம் ஓரளவுக்கு ஏற்பட்ட பிள்ளைகளுக்கு ஆசிரியர் பாடம் கற்பிப்பார். ஆசிரியர் வீட்டுத் திண்ணையிலேயே தங்கியும் அவர் ஏற்பாட்டிலேயே உணவு கொண்டும் படிக்கும் வழக்கமும் உண்டு.

## கல்வி

தமிழ் எழுத்துகளைப் போலவே தமிழ் எண்கள் கற்பிக்கப்பட்டன. கடைக்கணக்கு எழுதவும், கடிதம் எழுதவும், பஞ்சாங்கம் பார்க்கவும் தெரிந்தால் போதும் என்ற அளவில் நின்றவரும் உண்டு. இலக்கிய இலக்கணம் வல்ல புலவர்களை ஊர் ஊராகச் சென்று அவர்கள் இசைவால் பாடம் பயின்று தமிழ் கற்பிக்கவும், பாராயணம் செய்யவும் பாடல் இயற்றவும் கற்றவர்கள் உண்டு.

இன்னாரிடம் பயின்றவர் என்று சொல்வதே சான்றிதழாக இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஒன்றிரண்டாகத் தொடக்கப் பள்ளி முறை ஏற்பட்டது. ஐந்து வரை கற்கலாம். எட்டு, பத்து எனப் படிக்கப் பெரிய ஊர்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உண்டு. கல்லூரி என்பது பெரிய நகரங்களில் கூட அரிதாகவே அமைந்திருந்தன.

அரசு பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு அரசே சம்பளம் தந்தது. ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு எனப் படித்து முடித்தவர்கள் ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணியாற்றும் நிலை உண்டாயிற்று. ஐந்தாம் வகுப்புக் கற்றவர் தொடக்கநிலை ஆசிரியராகவும், எட்டாம் வகுப்புக் கற்றவர் உயர்தர ஆசிரியராகவும், பத்தாம் வகுப்புப் படித்தவர் இடைநிலை ஆசிரியராகவும் பயிற்சி பெற்றனர். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர் பட்டம் தாங்கிப் பயிற்சி பெற்று உயர்நிலை வகுப்பாசிரியர் எனப்பட்டனர்.

## ஆங்கிலேயர் பள்ளி

ஆங்கிலேயர் பள்ளி வந்தபின் பெண்களும் கல்விக்கூடம் செல்லும் நிலை உண்டாயிற்று. அப்படி ஏற்பட்டாலும் ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு என்பவற்றுக்கு மேல் பெண்களைப் படிக்க வைக்கப் பெற்றோர் இசையவில்லை. பெண்களுக்கெனத் தனிப் பள்ளிகள் ஏற்பட்டபின், பெண்கள் கல்வியும் வளர்ச்சி பெற்றது. கிறித்தவச் சார்பு ஏற்பட்டமை பொதுவகையில் கல்விக்கும் சிறப்பாகப் பெண்கள் கல்விக்கும் வாய்ப்பாயிற்று என்பதைச் சுட்டுதல் வேண்டும்.

பழநாள் பள்ளிகள் உயர்ந்த கட்டட வாய்ப்போ, விளையாட்டிட வாய்ப்போ கொண்டவை இல்லை.

அரசு உதவி பெற்ற பள்ளிகளும் அவ்வாய்ப்புகளைப் பெற்றதில்லை. ஆனால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நல்ல தொடர்பு இருந்தது. பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று எண்ணுவார் குறைவாகவே இருந்தனர். ஆசிரியர் முயன்றே பள்ளிக்குப் பிள்ளைகளைச் சேர்க்கும் நிலை இருந்தது. தெருத் தெருவாகச் சென்று மாணவர்களை அழைத்தலும், ஆசிரியரைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்பவர்களும் உண்டு.

## தண்டனை

தம்மிடம் படிக்கும் பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியருக்கு இருந்தது. அதனால், அக்கறையோடு பாடம் நடத்துதலும், படிப்பில் ஆர்வமில்லாத மாணவர்களையும் ஒழுங்கற்றவர்களையும் ஆசிரியர்கள் கண்டித்தல் தண்டித்தல் ஆகியனவும் உண்டு.

தோப்புக் கரணம் போடல், தலையில் குட்டல், பிரம்பால் அடித்தல் என்பவை எளிமையான தண்டனைகள்.

தோப்புக் கரணம் போடுதல், உக்கி போடுதல் எனவும் வழங்கும். தம் காதைப் பிடித்துக் கொண்டு இத்தனை முறை

உட்கார்ந்து எழும்புதல் அது. இருபது முறை முப்பது முறை என எண்ணப்படும். இரண்டு மூன்று மாணவர்கள் மாறிமாறிக் காதைப்பிடித்து உக்கி போடுதலும் உண்டு. மண்டிக்கால் போடுதலும், மண்டிக்கால் போட்டுப் பள்ளியைச் சுற்ற வைத்தலும் உண்டு.

பச்சைக்குதிரை ஏறல் என்னும் தண்டனை படிப்பில் தேர்ச்சி இல்லாதவன், சரியான மறுமொழி சொல்லாதவன் குனிந்து கொள்ள அவன் மேல் தேர்ச்சியன் (அ) கெட்டிக்காரன் ஏறுதல் என்பது அது. இன்னும் கடுமையான தண்டனை கிட்டி போடுதல், வளையில் கட்டித் தொங்கவிடுதல் என்பவை. ஆசிரியர்கள் தண்டிப்பதற்குப் பெற்றோர் தடை செய்வதில்லை. பள்ளியில் சேர்க்கும் போதே கண்ணிரண்டையும் விட்டுவிட்டுத் தோலை உரித்தாவது படிக்க வைத்தால் போதும் என்று பெற்றோர்கள் சொல்வது உண்டு.

பள்ளிக்கு முதல் பையனாக வரவேண்டும் என்று ஆர்வமுள்ள மாணவர்கள் அத்தனை பேரும் அக்கறைப் படுவர். ஏனெனில், 'ஏரான்' என்னும் ஒருமுறை இருந்தது. விடிகாலை ஐந்து, ஐந்தரை மணிக்கே பையைத் தூக்கிக் கொண்டு ஓடிவருவர்.

## ஏரான்

முதன்முதலாக வந்தவன் 'ஏரான்' எனப்படுவான். அடுத்து வருபவன் முதலாக வரிசையாக வந்தவர்களை முதலாமவன் எழுதி வைப்பான். ஆசிரியர் வந்ததும் ஏரானை விட்டுவிட்டு அடுத்தவனைப் பிரப்பால் கையில் தடவுவார். வரவர அடி பலமாகும். அடி வாங்கக் கூடாது என்பதற்காகவே அப்படி வருவர்.

## பாடம் சொல்லல்

வந்தவர்கள் விளையாடவோ பேசவோ கூடாது. சட்டாம்பிள்ளை என்னும் மாணவன் வந்ததும் ஒன்று, இரண்டு, பெருக்கல் வாய்பாடு, ஆனா ஆவன்னா, ஆத்திசூடி முதலானவற்றை ஒருவன் சொல்ல மற்றவர்கள் சொல்லவேண்டும்.

ஆசிரியரும் முற்படவே வந்து விடுவார். அதன்பின், மாணவர்களைக் காலை உணவுக்கு விடுவார். அவரும் உணவை முடித்து விட்டுப் பள்ளிக்கு வருவார். ஒருவரே பெரும்பாலும் ஆசிரியராக இருப்பார். காலம் செல்லச் செல்ல மாணவர்கள் பெருக ஆசிரியர் இருவர் மூவர் எனப் பெருகினர். இவை எல்லாம் என் இளந்தைப் பருவத்தில் 1935 முதல் நேரில் கண்டவையே! அதற்கு முற்பட்ட காலம் ஏட்டுச் சுவடிக் காலமாக இருந்தது. பள்ளிக்கு வைப்பதை ஏடு தொடங்குதல் என்பதே வழக்கம்.

தமிழ்நூல் பதிப்பில் முற்பட்டது திருக்குறள் மூலமும் நாலடியார் மூலமும் ஒன்றாக இணைத்து அச்சிட்டதாகிய பதிப்பே. அதன் ஆண்டு கி.பி. 1812. அதற்குப் பின்னரே தாளில் அச்சிட்ட நூல்கள் வரலாயின.

## விளையாட்டு

பள்ளிகளில் நொண்டி, கிளித்தட்டு, பேப்பந்து, போ (அவுட்), ஒளிந்து விளையாடல், குடட்டி எனப்பட்ட சடுகுடு என்னும் ஆடல்கள் உண்டு. குறுநாடகங்கள், உரையாடல்கள், இசைப்பாடல்கள் உண்டு. பொங்கல் ஊர்த் திருவிழா நாள்கள் ஊருக்கு எப்படிச் சிறப்பான நாள்களோ அப்படி நாள்கள் ஒன்பான் இரவு நாள்கள். ஒன்பது நாள்களும் மாணவர்கள் ஒயில்கும்மி, கும்மி, கரகாட்டம், இராட்டினம் என்பவை ஆடி மக்களிடம் நன்கொடை வாங்குவர். ஆசிரியர்க்கு வருவாயும், மாணவர்களுக்குத் தம் திறமை காட்டலும் ஊரார்க்கு மகிழ்வாம் நிகழ்ச்சியாக இஃதமையும். பிள்ளைகள் சேர்க்கையும் அப்பொழுது நடைபெறும்.

அரசுப்பள்ளிகள், அரசு உதவிபெறு பள்ளிகள் அனைத்திலும் அரச வாழ்த்துக் கட்டாயம் இடமுண்டு. “ஆறாம் சார்ச்சு வாழ்க வாழ்க” என்பது 1930 - 1940 களில் பாடப்பட்ட பாட்டு. சுவர்களில் அவர்கள் படமும் இருக்கும்.

# மீள்பார்வை

ஒரு மீள்பார்வை பார்த்தால் தமிழர் தம் வீழ்ச்சி நன்கு புலப்படும். சங்கச் சான்றோர் வாழ்ந்த பட்டிகள் ஊர்கள் பேரூர்கள் இன்றும் அடையாளம் காண உள. பெண்பால் புலவர்களும் பல்வகைத் தொழில் வல்லார்களும் அரசவை ஏறியும், களங்கண்டும், தூது சென்றும் பாடியுளர். இருந்தும் தமிழர் தம் தமிழ்க் கல்வியை வரவர இழந்தமை ஏன் எனச் சிந்திக்க வைக்கவில்லையா?

மன்னராட்சி நீயா நானா என்ற போட்டி நிலை!
பொதுவெனப் பொறாப் புன்மை!
இனமென ஒன்றா இழிமை!
இனமல்லார் கூட்டும் கொடையும்;
இனஅழிப்புக்கும் இழிப்புக்கும் இடம் தரல்;
மகளிரை அடிமைப்படுத்தல்;

தம்போட்டியால் அயலாரை அழைத்து ஆளவைத்தல். அவர்க்கு அடங்கி ஒடுங்கி நின்ற மானக்கேடு என்பவை அவை.

### சடங்குகள்

தாயொடு பிறந்தார் தாய்மாமன்மார்!

தந்தையொடு பிறந்தார் தாயொடு பிறந்தார் என்பார், உற்றார் உறவினர்; கேள் கிளை; கொண்டவர் கொடுத்தவர். இச்சொற்களைக் காவு வாங்கியது ‘சம்பந்தி’!

ஒருபெண் பூப்புற்றால் ஊர்மகளிர் கூடி, நீராட்டல், மாமன் உடை தரல், மாமன் குடிசை கட்டல், ஆங்கிருத்தல், முதியவரை வணங்கி வீடு வைத்தல்; ஊர் உறவென அனைவரும் உழுந்தங்களி, வடை, இனிப்பு எனச் செய்து வழங்குதல்! பதியன் போட்ட பூஞ்செடியென வீட்டவரால் போற்றப்படுதல்; வீட்டுச் சிறையென வாழ்க்கை அமைதல்! உற்ற தோழி ஒருத்தி எப்பொழுதும் உடனிருப்பாள்.

திருமணம் வாழ்வில் உயரிய சடங்கு. இதனை மகளிரே பண்டு நடத்தினர் என்பது அகநூனூற்று 86, 136 ஆம் பாடல்களில் அறியப்படும். பெரும்பாலும் முழுமதி நாளில் நடைபெற்றதால் முழுத்தம் எனப்பட்டது. இரவிலே தான் நடைபெறும்.

பெரும்பாலும் உழவர், வணிகர், தொழிலராக இருந்ததால் அவர்கள் வேலைக்குத் தடையில்லாமல் இரவில் திருமணம் நடைபெற்றது. உழுந்தக்களி நெய் இனிப்பு அமைந்த உணவு உண்டு, மக்களைப் பெற்ற மங்கல மடந்தையர் நால்வர் மணவிழா நிகழ்த்தினர். வாழ்த்தும் உரைத்தனர். அவர்கள் பொதுத் தொண்டு செய்தலில் தேர்ச்சி மிக்கார்! அன்று இரவே புதுமண மக்களை 'ஓரில்' படுத்தனர். என் மணமும், எங்கள் ஊரினர் மணமும் உறவினர் மணமும் இவ்வாறே நடைபெற்றன. என் திருமணம் 1946 - ஆம் ஆண்டு நிகழ்ந்தது. வேதியம் இல்லை; வேள்வித் தீ இல்லை; காசிச் செலவு இல்லை; அம்மிக்கல் மிதிப்பு, அருந்ததி பார்ப்பு, முதலிரவு நாள் நேரம் எனப்பார்ப்பு என்பவை எவையும் இல்லை.

ஊரவர், ஊர்த் தலைமையில், பக்கத்தூரர் வரத்தில், மொய்தருதல், சுருள் தருதல், இலைபாக்கு வழங்கல் என்பவையே மணவிழா! மணத்தின் பின் எவ்வறியர் எனினும் எவ்வளவர் எனினும் ஒரு திங்கள் அளவு வீடு வீடாக விருந்தழைப்பு உண்டு. அவ்விருந்தும் முன்னரே இன்னார் வீடு எனத் திட்டப்படுத்தி நடைபெறும். மணவீட்டார்களுக்கு மட்டுமே சுமை - இன்பம் - துன்பம் என்பவை இல்லாமல் ஊரே ஒப்புரவாகச் செய்தது அது.

இறப்புச் சடங்கு எனின் ஊர்க்கட்டு உண்டு. எவரும் வேலைக்குச் செல்லார். இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தலிடல், உருமிக் கொட்டு வைத்தல், நீர்மாலை எடுத்துக் குளிப்பாட்டல், பாடையிலோ, பல்லக்கு அமைத்தோ சங்கு சேகண்டி முழங்கத் தீச் சட்டி உடனாகச் செல்லுதலும், மகளிர் ஊர்வரை வந்து கொள்ளிக் குடம் உடைத்து மீள்தலும், ஆடவர் மட்டும் இடுகாடு கொண்டு செல்லுதலும், மூத்தவர் என்னின் சுடலும் வழக்கம்.

அன்றைச் செலவு வீட்டார்க்கு உண்டாகா வகையில் வந்தவர் அனைவரும் இடுகாட்டுச் செலவுப் பணம் என வழங்குவதை, சங்கு சேகண்டி கொட்டு குழிதோண்டல் அல்லது எரியூட்டல் மொட்டையிடல் என ஈடுபட்ட தொழிலர்க்கு வழக்கமுறைப்படி உள்ள காசையெல்லாம் பிரித்துக் கொடுத்துவிட்டு ஆற்றிலோ குளத்திலோ கிணற்றிலோ நீராடி விட்டு வந்து, இறந்த வீட்டில் ஏற்றப்பட்ட குத்துவிளக்கு ஒளியை வழிபட்டுச் செல்லுதல் வழக்கம். வெளியூரார்க்கு உறவு வீடுகளில் உணவு வழங்கலும், இறப்பு வீட்டார்க்கும் வழங்கலும் வழக்கம். ஒருநாள் விட்டு மறுநாள் தீயாற்றுதல் கல்லெடுத்தல் என்பவை விடியலில் நிகழும்! பதினாறாம் நாளோ, அதற்குமுன் ஒற்றைப்படை எண் வரும் ஒருநாளோ கருமாதிச் சடங்கு நிகழும். கோடிபோடுதல், தலைப்பாகை கட்டுதல் (லேஞ்சு) என்பவை அவை. மற்றைப் பொதுவாம் விழாக்களை முன்னரே பார்த்துள்ளோம்.

## தெரு - வீடு

ஊர் சிறிது பெரிது என இருந்தாலும் தெருவமைப்பு செப்பமாக இருந்தது. ஊர்நடுவே ஊர்க் கிணறு உண்டு. அதனை அடுத்து ஊர் மடமும் உண்டு. ஊரின் கடைசியில் பள்ளி இருந்தது. சேரி அமைப்பும் உண்டு.

சில வீடுகள் தோட்ட வீடுகள் என இருந்தன. ஆங்கு ஒப்பந்தக் கூலியர் குடியிருப்பும் இருந்தது. பெரிதும் கூரை வேய்ந்த வீடுகள் அவை. ஆடு மாடு கோழி என்பவை தோட்ட வீட்டில் உண்டு; காவல் நாயும் உண்டு.

## சந்தை

சில சிற்றூர்களுக்குப் பொதுவான நடு இடத்திலே பேரூர்களிலே இன்ன கிழமை சந்தை எனக் கொண்டு விற்பவர் உண்டு. அங்கேயே ஆடு மாடு விற்பனையும் சில இடங்களில் மாட்டுத் தாம்பணி (தாவணி) யும் நிகழும். அஃது ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்வது.

புதன் சந்தை, வியாழன் சந்தை, பாம்புக் கோயில் சந்தை, கழுகுமலைத் தாவணி என்பன போல அவற்றின் பெயர்கள் இருந்தன. இன்றும் ஊர்ப்பெயர்களாகவும் உள.

## நீர்நிலை

ஆறில்லா ஊர்க்கு அழகு பாழ்! என்பர். ஆனால் அவ் வாறு அமையாத ஊர்களிலும் ஏரி, குளம், கண்வாய், கால்வாய் என்பவை உண்டு. ஆடவர் மகளிர்க்கு நீந்தும் பயிற்சி உண்டு.

ஏரி என்பது ஏர்த் தொழிலுக்குப் பயன்பட்டது.
குளம் என்பது குடிநீர், குளிநீர்க்குப் பயன்பட்டது.

கால்வாய் உள்ள இடம் நெல் கரும்பு வாழை என நன்செய்ப் பயிர் விளையும் இடமாம்! கரிசல், செவல், பொட்டல் புன்செய்ப்பயிர் விளையும் இடங்களாக இருந்தன. கரும்பாலை, செக்காலை, செங்கல் சூளை, அரிசி ஆலை என்பவை சற்றே வளமான ஊர்களில் இருந்தன.

## பஞ்சம்

மழையில்லாமல் விளைவில்லாமல் தொழில் வருவாய் இல்லாமல் பஞ்சம் உண்டாய காலம் பேரூர்களிலும், சிற்றூர்களை வாட்டியதே மிகுதி. பேரூர்களில் தொழில் வருவாய், அலுவல் வருவாய், வணிக வருவாய் என உண்டு.

சிற்றூர்களில் உழவர்களும் உழவுசார் தொழிலாளர்களும் அதிலும் அற்றைக் கூலியரும் இருந்தமையால் பஞ்சம் அவர்களை வாட்டி வருத்துதல் கொடுமையாம். அக்கொடுமையில் எறும்புப் புற்றைத் தோண்டி அது சேர்த்த சிற்றரிசி (புல்லரிசி)யை எடுத்து வந்து கஞ்சி காய்ச்சிக் குடித்தலும், குப்பைக் கீரையைப் பறித்துக் கடைந்து உண்ணலும், புளியங்கொட்டையை வறுத்து இடித்து ஊற வைத்துத் தின்னலும் பசிக் கொடுமையால் நிகழ்வதுண்டு.

"இடும்பைகூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது" என்னும் ஔவையார் தனிப்பாடல் பட்டறிவுப் பாடலாதல் பஞ்ச நாளில் பளிச்செனப் புலப்படும்.

அந்நாள் வெயில் வாட்டுவதாகவும் அமையும். பகலெல்லாம் வீட்டுள் அடைந்தும், இரவெல்லாம் முற்றத்தில் கிடந்தும்

"இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு"

என்னும் வாழ்வியல் விளக்கமாகவே ஊரே அலமரும்!

அடைவுபோட்டு வாங்கத் தங்கம் இராது. அண்டா குண்டா என்பவை அடைவு வைக்கப்படும். குழந்தைகளின் காலில் இட்ட வெள்ளிக் கொலுசும், அரைஞாணும் அடைவுக் கடைக்கோ விற்பனைக் கடைக்கோ செல்லும்! எத்தனை நாள்களுக்குத் தாங்கும்?

### வாராவளம்

இந்த அவல வாழ்வின் இடையே அமைந்த அருமைநிலை ஒன்று உண்டு! உழைத்த உடல் - களைத்த உழைப்பு - பழையதா - சுடுவதா, சோறா கஞ்சியா, மொட்டைக் கூழா எதுவாயினும்,

கயிற்றுக் கட்டிலா, வெறுந்தரை விரிப்பா, பாய்ப் படுக்கையா - படுத்ததும் உறக்கம் வரும்!

பட்டணத்துப் பளிச்சிட்ட வாழ்வார்க்கு வாராத வளம் வள்ளல் வளம், சிற்றூரார்க்குப் படுத்ததும் ஓடிவந்து ஒன்றிக் கொள்ளும் உறக்கப் பெருவளம்!

வறுமையின் - உழைப்பின் - பயன் நலம் உறக்கம்!

பணம்போட்டு வாங்கும் பொருளா உறக்கம்!

பணம்போட்டு வாங்கும் மருந்து உறக்கம், இயற்கைக்கு மாறானது தானே!

மேலும் மேலும் வீரியம் கூட்டி, உடல் உள வீரியம் இழந்து போகச் செய்யும் இயல்பினது தானே அது.

வறியர்க்கும் உழைப்பர்க்கும் பஞ்சமிலாப் பெருவளம் உறக்கவளம் என்பது கொண்டே பொய்யா மொழியார் வறுமையை 'நிரப்பு' (நிரம்பிய வளம்) என்றார் போலும்.

## எண்ணச்செய்வன

எத்தகு செல்வர் எனினும் எளிமை போற்றினர்; உடையில் எளிமை; உணவில் எளிமை; உறைவிடத்தில் எளிமை; உள்ள அளவில் எளிமை போற்றியது உள்ளநிறைவாக அமைந்தது.

உள்ளூரில் தைக்கப்பட்ட செருப்பு, வெயிலுக்கும் மழைக்கும் தாழங்குடை, எவ்வளவு தொலைவு எனினும் நடை: மழைக்குக் கொங்காணி, பட்டியல் கல்லில் உட்காரல், படுத்தல், துண்டே விரிப்பு, திண்டே தலையணை, வீட்டில் செய்தனவே தின்பண்டம், கூட்டுவாழ்வு, ஒப்பத் தளத்தில் தாமரை இருக்கையில் (சம்மணம்) இருந்து உண்ணல், ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்ட உழைப்பு, முறை சொல்லி எவரையும் அழைத்தல், இன்னார் அப்பா, இன்னார் அம்மா என்று பெரியவர்கள் பெயர் கூறாத மதிப்புடைமை, மேனி மினுக்கி வாழ்வு இல்லாமை, கரவு இல்லா உறவு இவையெல்லாம் இன்று எண்ணிப்பார்க்க வைக்கின்றன.

## விடுதலை

விடுதலைப் போராட்டம் சிற்றூரையும் தட்டி எழுப்பியது. இராட்டை, தக்களி, நூற்றல், கைந்நூல் ஆடை, விடுதலை முழக்கம் என்பவை இளையரை ஈர்த்த காலம்! ஊரூர்க்கு வாலியர் சங்கம், காங்கிரசுக் கொடி, கூட்டம், ஊர்வலம், காவலர் கெடுபிடி என்பனவெல்லாம் இருந்தகாலம்! அறப்போராட்டம், இன்னா செய்யாமை என்பவை (சத்தியாக்கிரகம், அகிம்சை) முற்பாதிக்காலம்! பிற்பாதிக்காலம் அக்கட்சியால் மண்ணிழப்பு, மற்றைக் கட்சிகளால் மொழி இனநல இழப்பு எனத் தொடர் இழப்பு, ஊழல்,

கொள்ளையடிப்பு ‘அரசியலா’ கயமையின் தங்கல்மனை ஆகிவிட்ட நிலை! குடியரசு என்றால் குடியராக்கல், அரசு என்று நிலைபெற்ற காட்சி! கொள்ளை - கரவுப் பணத்தால் - இலவயங்களைத் தந்து - உழைப்பைக் கெடுத்து விட்ட அவலநிலை! அடாவடியனே ஊராள்வான் என்று முடிபாகிய காட்சி! சாதிமை அரசியலும், திரவிடப் போலிமையும் ஆரிய வஞ்சமும் ஆங்கில நஞ்சமும் வீட்டையும் நாட்டையும் முற்றுகையிட்டு விட்டநிலையெல்லாம் ஓரறுபது ஆண்டுகளுக்குள்! மீட்டொரு விடுதலைப்போரை நாடு நோக்கியுள்ள நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது! மக்கள் விழிப்பும் இளையர் எழுச்சியும் அறிஞர் வழிகாட்டலும் தலைமையர் தோன்றலும் நோக்கியுள்ள காலம் இது.

❖❖❖❖

உழவுத்தொழில் குடும்பத்தொழில். அவரவர் குடும்பமே அத்தொழிலைச் செய்யும். நடவுபோடல், அறுவடை செய்தல், களை பறித்தல், களவேலை என்பவற்றுக்குக் கூலியாள்களை வைத்துக் கொள்வர். ஆண்டு ஒப்பந்தக் கூலியர் உண்டு.

அறுவடை, களமடிப்பு, நிலம் ஒப்புரவு செய்தல் என்பவற்றுக்கு மொத்தமாகக் கூலி பேசி வேலை வாங்கும் மேலாள்களும் இருந்தனர்.

ஒற்றைமாடு உடையவர் மற்றொரு மாட்டை உடையாரொடு கூட்டுச் சேர்ந்து இருவர் நிலங்களிலும் பயிரிடலும் உண்டு.

ஓரேர் உடையார் மற்றும் ஓர் ஏருடையாரைக் கூட்டுச் சேர்த்துக் கூட்டேர் வைத்து உழுதல், விதைத்தல் உண்டு. விதைக்கும் திறம் எல்லார்க்கும் வாராது. நிரவலாக விதைக்க வல்லாரை அழைத்து விதைப்பது வழக்கம்.